**செய்தி குறிப்பு எண். 37** **நாள். 23.4.2008**

**வேளாண்மைத் துறை செயலாளர் திரு.சுர்ஜித் கே.சௌத்ரி அவர்களால் வாசிக்கப்பட்டது.**

**வேளாண்மை வளர்ச்சிக்கான மாநில வேளாண்மைத்துறை அமைச்சர்களின் மாநாடு 2008**

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**

திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,

**தமிழ்நாடு அரசு**

**அவர்களின் உரை**

மாண்புமிகு மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு சரத்பவார் அவர்களே, பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை புரிந்துள்ள வேளாண்மைத்துறை மற்றும் வேளாண் விற்பனைத்துறை அமைச்சர்களே, மத்திய மற்றும் மாநில அரசுகளின் உயர் அலுவலர்களே மற்றும் வேளாண்மை விஞ்ஞானிகளே, அனைவருக்கும் வணக்கம்.

தமிழகத்தில் தற்போது சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டு உள்ளதால், நான் நேரில் வந்து இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை உற்பத்தி ஆணையாளரும் அரசுத்துறை செயலாளருமான திரு. சுர்ஜித் கே. சவுத்ரி, இ.ஆ.ப. அவர்கள் தமிழக அரசின் சார்பாக எனது உரையை எடுத்து வைப்பார்கள்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழக அரசின் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு எனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் 56 சதவீதம் மக்கள் வேளாண்மையையும், அதனைச் சார்ந்த தொழில்களையும், வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளார்கள். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வது வேளாண்மை வளர்ச்சியை சார்ந்தே உள்ளது. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய தொழில் வளர்ச்சியினால் தொழிற்சாலை பணிகளில் ஈடுபடும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வரும் நிலையில் அதற்கு இணையாக வேளாண்மை பணிகளைச் சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்த்த வேண்டியது அவசியமாகின்றது. தற்போதுள்ள சாகுபடி முறையிலிருந்து மாறுபட்டு, வேளாண்மையை வணிக ரீதியாக, சாகுபடி செய்து, உற்பத்தித் திறனை பல மடங்கு உயர்த்தக் கூடிய புதிய தொழில் நுட்ப முறைகளை விவசாயிகள் முழுமையாகக் கடைப்பிடித்தல், மதிப்பு கூட்டுதல், பதப்படுத்துதல், விற்பனை வாய்ப்புகளை பயன்படுத்துதல் ஆகியவைகளைக் கொண்டு நிரந்தர வேளாண் மேம்பாட்டினை அடைய தமிழகஅரசு முயற்சிகள் எடுத்து வருகிறது.

குறைந்து வரும் சாகுபடி பரப்பு மற்றும் நீர் ஆதாரம், மண் வளப் பாதிப்பு, விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறை ஆகிய இடர்பாடுகள் விரைவான வேளாண் வளர்ச்சிக்கு தடையாக உள்ளன. இத்தகைய இடர்பாடுகளையும் கடந்து, வேளாண்மையில், சிறப்பான வளர்ச்சியை அடையும் வகையில் பல்வேறு திட்டங்களை, தமிழக அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேசிய அளவில் நதிகளை இணைத்து, வீணாகக் கடலில் கலக்கும் உபரி நீரைக் கொண்டு மானாவாரி நிலப்பகுதிகளை பெருமளவில் சாகுபடிக்கு கொண்டு வந்து அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய மாபெரும் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இதில் காலதாமதம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு, முதற்கட்டமாக மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்கி காவேரி ஆற்றின் உபரி நீரையும், தாமிர பரணி ஆற்றின் உபரி

நீரையும் வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்காக 2008 -- 09 ஆம் ஆண்டு திட்டம் தொடங்கப்பட உள்ளது.

விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை சமாளிக்க பல்வேறு உதவிகளையும் நிவாரணங்களையும் தமிழக அரசு வழங்கி வருகிறது. கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய ரூ.7000 கோடி அளவில் பயிர் கடன் தள்ளுபடி செய்தும், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க்கடன்களுக்கான வட்டி விகிதத்தை 9 சதவீதத்திலிருந்து 2008–09ம் நிதியாண்டு முதல் பயிர்க்கடன் வட்டி விகிதத்தை 4 சதவீதமாக குறைத்தும் தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகள் பயனடையும் வகையில் கூட்டுறவு வங்கிகளில் 4 சதம் பயிர்க்கடன் வழங்குவதைப் போல நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிலும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க் கடனுக்கு 4 சதம் வட்டி வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண் மின் மோட்டார்களுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்குவதை நீட்டித்தும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு சீரமைக்கப்பட்ட தரிசு நிலம் இலவசமாக வழங்கியும், கல்வி, திருமணம், மகப்பேறு, ஓய்வூதியம் மற்றும் இறுதி சடங்கிற்கான செலவிற்கு தமிழ்நாடு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்கி வருகிறது. இதுபோன்ற பல்வேறு உதவிகள் வழங்கி விவசாயிகளை தமிழக அரசு பாதுகாத்து வருவதால் தமிழகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது அறவே இல்லை.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யும் சன்ன ரக நெல்லுக்கு மத்திய அரசு விலையான ரூ.775/– உடன் மாநில அரசு ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூ.50/– சேர்த்து ரூ.825/–ம், சாதாரண ரக நெல்லுக்கு மத்திய அரசு விலையான ரூ.745/– உடன் மாநில அரசு ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூ.50/– சேர்த்து ரூ.795/–ம் வழங்கப்படுகிறது. கோதுமைக்கு, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1000/- வழங்குவதைப் போல், நெல்லுக்கும் சன்ன ரகத்திற்கு ரூ.1050ம், சாதாரண ரகத்திற்கு ரூ.1000ம் குறைந்தபட்ச ஆதார விலையாக நிர்ணயிக்க மத்திய அரசிடம் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணையை விரைவில் வழங்க மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

2008–09ம் நிதியாண்டில் உற்பத்தி செய்யப்படும் பயறு வகைகளுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை மூலமாக மத்திய அரசின் குறைந்த பட்ச ஆதரவு விலையின் அடிப்படையில் பயறு வகைகளை கொள்முதல் செய்ய தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

வேளாண்மை விரிவாக்கத்தை திறம்பட மேற்கொள்ளும் வகையில் வேளாண்மை மற்றும் சகோதரத் துறைகளில் நடைமுறையில் இருந்த மூன்றடுக்கு நிர்வாக முறையை ஈரடுக்கு நிர்வாக முறையாக மாற்றி துறைகள் மறு சீரமைக்கப்பட்டுள்ளது. வட்டார அளவில் அனைத்து துறை அலுவலர்களும், பணியமர்த்தப்பட்டதன் மூலம் விவசாயிகள் அனைத்து தொழில் நுட்ப சேவைகளையும், திட்ட உதவிகளையும் ஒரே இடத்தில் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வட்டார மற்றும் மாவட்ட அளவிலான அலுவலகங்கள், மாநில வேளாண்மை மற்றும் சகோதரத் துறைகள் தலைமை அலுவலகங்களுடனும் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடனும் வலைதளம் மூலம் இணைத்து விவசாயிகளுக்கு உடனுக்குடன் தொழில் நுட்ப சேவை கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலை மற்றும் மண் வளம், தோட்டக்கலைப் பயிர் சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாக உள்ளதாலும், இப்பயிர்கள் சாகுபடி மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாய் பெற வாய்ப்புள்ளதாலும், காய்கறி மற்றும் பழங்கள், மூலிகைப் பயிர்கள் ஆகியவற்றால்

ஊட்டச்சத்து பாதுகாப்பு கிடைக்கும் என்பதாலும், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் பெருமளவில் ஊக்குவித்து மேம்படுத்த தமிழகஅரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வேளாண் விளைபொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட, உழவர் சந்தை வசதி, அறுவடைக்குப்பின் நேர்த்தி, அழுகும் பொருட்களை குளிர்பதன கிடங்குகளில் பாதுகாத்தல், உணவு பதப்படுத்தல், ஏற்றுமதி மண்டலங்கள் அமைத்தல், விற்பனை முனையங்கள் அமைத்தல் ஆகியவற்றின் மூலம் நல்ல விலை கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், உணவுப் பொருட்கள் 30 சதவீதம் வீணாவதை தடுத்து, மொத்த உற்பத்தியில் உணவு பதப்படுத்துதலை 1 சதத்திலிருந்து 10 சதமாக அதிகரிக்கவும், மதிப்பு கூட்டுதலை 7 சதத்திலிருந்து 30 சதமாக உயர்த்துவதன் மூலமும், விவசாயிகளுக்கு உற்பத்திக்கேற்ற உரிய விலை கிடைக்கவும், உணவு பதப்படுத்துதல் தொழிலை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி செய்வதால் அன்னிய செலாவணியை ஈட்டவும் வேளாண் தொழில் கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற் கொள்கையின் கீழ் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வேளாண் தொழிற்சாலைகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்பாசன கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும் வழங்க தமிழகஅரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**உணவு தானிய உற்பத்தி**

2005–06ம் ஆண்டில் பெறப்பட்ட உணவு தானிய உற்பத்தியான 61.17 மெ.டன்களை விட அதிகமாக 2006–07ம் ஆண்டில் உணவு உற்பத்தி 82.63 மெ.டன் என்ற அளவை எட்டியுள்ளது. 2007–08ம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 100.35 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2008–09ம் ஆண்டில் 108 இலட்சம் மெ.டன்கள் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**செம்மை நெல் சாகுபடி (System Rice Intensification)**

தமிழ்நாட்டில் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை முறையாக மேற்கொள்வதினால் எக்டருக்கு 10 முதல் 13.38 மெ.டன்கள் வரை நெல் மகசூல் கிடைக்கிறது. 2007–08ம் ஆண்டில் ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி செயல்விளக்கம் 11690 எக்டர் பரப்பில் அமைக்கப்பட்டு 58450 விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. விரிவாக்க அலுவலர்கள் கிராம அளவிலான கூட்டங்கள் மூலமாகவும் விளம்பரம் மற்றும் பத்திரிகை செய்திகள் மூலமாகவும் விரிவாக இத்தொழில்நுட்ப விபரங்கள் மற்றும் பயன்கள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டதால் 2007–08ம் ஆண்டில் 4.20 இலட்சம் எக்டர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

செம்மை நெல் சாகுபடியை முழுமையாக கடைப்பிடிப்பதன் மூலம் அதிகபட்ச உற்பத்தி திறனை எக்டருக்கு விழுப்புரம் மாவட்டத்தில் 13.38 மெ.டன்னும் திருநெல்வேலி மாவட்டத்தில் 13.00 மெ.டன்னும், திருச்சி மாவட்டத்தில் 12.855 மெ.டன்னும், தேனி மாவட்டத்தில் 11.4 மெ.டன்னும், வேலூர் மாவட்டத்தில் 11 மெ.டன்னும், கடலூர் மாவட்டத்தில் 10.245 மெ.டன்னும் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2008–09ம் ஆண்டில் 7.5 இலட்சம் எக்டரில் செம்மை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

செம்மை நெல் சாகுபடிக்கு தேவையான கோனோ களையெடுக்கும் கருவி, மார்க்கர் கருவி மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கிட மானியமாக எக்டர் ஒன்றுக்கு ரூ.2000/– வீதம் 7.5 லட்சம் எக்டருக்கு ரூ.150 கோடி நிதி வழங்கிட மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

**தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்**

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் நெல் உற்பத்தி மற்றும் நெல் பரப்பினை அதிகரிக்கும் பொருட்டு இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு 2007–08ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்ப செயல்விளக்கங்கள், உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி, விளம்பரம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது இம்மாவட்டங்களில் 6.077 இலட்சம் எக்டரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. 2011–12ம் ஆண்டு சாகுபடி பரப்பை 6.920 இலட்சம் எக்டராக உயர்த்தவும், அரிசி உற்பத்தியை 13.518 இலட்சம் மெ.டன்னிலிருந்து 2011–12ம் ஆண்டு 45.852 இலட்சம் மெ.டன் அளவிற்கு உயர்த்தவும் இத்திட்டத்தின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது.

பயறுவகைக்கான தேசிய உணவு உற்பத்தி திட்டம் கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, நாகப்பட்டினம், நாமக்கல், திருவாரூர், திருவள்ளூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயறுவகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், ஜிப்சம், நுண்ணூட்ட உரம் , தெளிப்பு நீர்பாசனக் கருவிகள் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கங்கள் மற்றும் விவசாயிகள் பயிற்சியும் வழங்கப்படுகின்றன. இம்மாவட்டங்களில் 4.32 இலட்சம் எக்டரில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. 2011–12ம் ஆண்டில் சாகுபடி பரப்பை 7.36 இலட்சம் எக்டேராக உயர்த்தவும், பயறுவகை உற்பத்தியினை 1.43 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவிலிருந்து 2011 – 12 ஆம் ஆண்டு 4.78 இலட்சம் மெ.டன்களாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க 2 சதம் டி.ஏ.பி. கரைசல் இரண்டு முறை தெளித்து, நுண்ணூட்ட சத்து இடுவதற்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.300 வீதம் 5 இலட்சம் எக்டரில் பயறு வகை உற்பத்தி செய்ய ரூ.15 கோடி நிதி ஒதுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் யோஜனா)**

வேளாண்மையில் 4 சதவீதம் வளர்ச்சி அடையும் நோக்கத்துடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மத்திய அரசின் கூடுதல் நிதியுதவி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைக்கு பொதுத்துறைகள் மூலம் கூடுதல் ஒதுக்கீடு வழங்குதல், முக்கிய பயிர்களின் உற்பத்தி திறனில் உள்ள இடைவெளியை குறைக்க தேவையான திட்டங்களை மேற்கொள்ளுதல் விவசாயிகளின் வருமானத்தை பெருமளவிற்கு உயர்த்தி வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை குறிப்பிடத் தக்க அளவிற்கு உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ரூ.185.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியைக் கொண்டு 2007–08ம் ஆண்டில் வேளாண்மை மேம்பாட்டிற்காக துல்லிய பண்ணைத் திட்டம் 12,800 எக்டரில் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட உள்ளது. சிறிய மண் ஆய்வுக் கூடங்களுடன் கூடிய 224 வேளாண் ஆலோசனை மையங்கள் (Agri clinic) அமைக்கப்பட உள்ளது. தானியங்கி வானிலை ஆய்வு மையம் 224 வட்டாரங்களில் அமைத்தல் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விநியோகம், 10 மாவட்டங்களில் பண்ணை அளவில் திட்டமிட புவியியல் தகவல் புள்ளிவிபரங்கள் மற்றும் நிலவள விபரம் தயாரித்தல், 40 வட்டாரங்களில் மானாவாரி நிலமேம்பாடு மற்றும் பயிர் உற்பத்தியை பெருக்குதல், 9 மாவட்டங்களில் இயற்கை உரஉற்பத்தி, இயற்கை பண்ணையம் ஊக்குவித்தல், நகராட்சி கழிவுகளை இயற்கை உரமாக்குதல் மற்றும் உயிரியல் இடுபொருள் உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட உள்ளது. 10 ஏக்கர் மற்றும் 50 ஏக்கர் தொகுப்பாக உள்ள தரிசு நிலங்களை பண்படுத்தி நீர் ஆதாரம் அமைத்து மானாவாரி நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் மர வகைப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்படும். இத்திட்டங்கள் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கால்நடை, பால்வளம், மீன்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறைகள் மூலமாகவும் வேளாண் சார்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு 2008–09ஆம் நிதி ஆண்டிலும் மத்திய அரசு நிதி உதவி வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டம்**

தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் (National Agricultural Insurance Scheme) தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டு மாநில அரசுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சாதாரணமாக கடன்பெறும் விவசாயிகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டு பயனடைந்து வந்தார்கள். ஆனால், பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் இத்திட்டத்தில் பங்குபெற்று பதிவு செய்ய முன்வருவதில்லை. பயிர்க்கடன் பெறாத விவசாயிகளை இத்திட்டத்தில் பங்கேற்க வைத்து, காப்பீட்டு வசதியினை வழங்க வேண்டி, காப்பீட்டு தவணைத்தொகையில் 50 சத மானியத்தை வழங்குவதற்காக தமிழக அரசு 2006–07–ம் ஆண்டு ரூ.8 கோடி நிதி வழங்கியது.

2007–08 ஆம் நிதி ஆண்டில் 10 இலட்சம் கடன்பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு, காப்பீடு தொகையில் 50 சத மானியம் வழங்க ரூ.15.00 கோடி ஒதுக்கீடு செய்து, இதில் 5.61 லட்சம் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு ரூ.985.16 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2008 – 09 ஆம் நிதி ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்த தமிழக அரசு ரூ.40.00 கோடி ஒதுக்கீடு செய்து இதன் மூலம் 25 இலட்சம் விவசாயிகள் பயன் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் ஏற்கனவே வட்டார வாரியாக திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. தமிழக அரசின் முயற்சியினால் தற்போது விவசாயிகள் பயன் பெறும் வகையில் திட்டம் பிர்கா அளவில் செயல்படுத்தபட்டு வருகிறது. ஆனால் திட்டம் பகுதி வாரியாக (Area approach) செயல்படுத்தப்பட்டு வருவதால் விவசாயிகளுக்கு அவர்களுடைய தனிப்பட்ட சாகுபடி பரப்பில் ஏற்படும் பாதிப்புகளுக்கு தகுதியான நஷ்டஈடு கிடைப்பதில்லை. எனவே, விவசாயிகளுக்கு இயற்கை சீற்றம் மற்றும் பயிர் பாதிப்புகள் காரணமாக ஏற்படும் நஷ்டத்திற்கு உரிய இழப்பீடு வழங்கும் வகையில் இத்திட்டத்தினை மத்திய அரசு தனி நபர் காப்பீடு திட்டமாக (Individual Insurance approach) அறிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், 2008–09ஆம் ஆண்டு மத்திய மாநில அரசுகள் இணைந்து இத்திட்டத்தில் 50:50 என்ற விகிதாச்சாரத்தில் செயல்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு மத்திய அரசின் பங்காக 50 சத பிரிமிய மானியத் தொகை வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

## வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம்

தமிழ்நாட்டில் சராசரியாக 55 இலட்சம் எக்டரில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், பருத்தி, கரும்பு மற்றம் எண்ணெய்வித்துக்கள் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை ஆண்டு சராசரியாக 977 மி.மீ. மழை பெறப்படுகிறது. இதில் 33 சதவீதம் தென்மேற்கு பருவம் மூலமும், 48 சதவீதம் வடகிழக்கு பருவம் மூலமும் குளிர் மற்றும் கோடைப் பருவத்தில் 19 சதவீதம் மழை பெறப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாட்டில் வேளாண்மை மழையை சார்ந்து இருக்கும் நிலையில், ஒவ்வொரு வருடமும் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் மழையின்மை, வறட்சி, அதிக மழை, வெள்ளம் போன்ற பல் வேறு காரணங்களால் பலத்த பாதிப்பு அடைவதால், விவசாயிகளின் வாழ்வதாரம் பெரிதும் பாதிப்படைகிறது. இதனை கருத்தில் கொண்டு மத்திய அரசு வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டத்தினை (weather based crop Insurance Scheme) 2007–08 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தவும், மத்திய அரசும், மாநில அரசும் 50:50 விகிதத்தில் பிரிமீயம் தொகையினை பகிர்ந்து கொள்ளவும் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பருவக் காலத்தில் பெய்யும் மழையளவு சராசரி மழையை விட குறைந்த பட்சம் 20 சதவீதம் குறைந்திருக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகைக்கேற்ப உற்பத்தி திறன் இழப்பு கணக்கிடப்பட்டு நஷ்ட ஈடு வழங்கப்படும்.

மத்திய அரசின் நிர்வாக ஒப்புதலின் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் மூலம் 224 வட்டாரங்களில் தானியங்கி வானிலை மையம் (Automatic weather station) ரூ.16.90 கோடி ரூபாயில் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
2. இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம், ஐசிஐசிஐ – லம்பார்டு பொது காப்பீட்டு நிறுவனம், இப்கோ– டோக்கியோ பொது காப்பீடு நிறுவனம் போன்றவர்களோடு இத்திட்டம் விவாதிக்கப்பட்டு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையிலும், மழை

மற்றும் வறட்சியினால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து மீட்கவும் விவசாயிகளுக்கு உகந்த வகையில் பயிர் காப்பீடு செய்வதற்கான திட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. பல்வேறு காப்பீடு நிறுவனங்களின் திட்டத்தினை மதிப்பீடு செய்வதற்கும், விவசாயிகள் ஏற்கத்தக்க வகையில் மாற்றம் செய்வதற்கும், தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக வல்லுனர்கள் ஈடுபடுத்தப்பட்டு இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செம்மையாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## <u>வேளாண்மை விற்பனை</u>

### வேளாண் விற்பனை சட்ட சீர்திருத்தம்

மத்திய அரசால் உருவாக்கப்பட்ட மாதிரி சட்டம் கீழ்க் குறிப்பிட்ட இனங்களுக்கு முக்கியத்துவம் அளித்து உருவாக்கப்பட்டுள்ளது.

- நேரடி வனிகம்
- தனியார் வேளாண் விளைபொருள் அங்காடி / மண்டி உருவாக்கம்
- ஒப்பந்தப் பண்ணையம்

நாட்டிலுள்ள பெரும்பாலான மாநிலங்களில் விற்பனை குழுவிற்கு வெளியே வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, இத்தடைகளை களைந்தெரிய வேளாண் விற்பனை சட்டத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டியது அவசியமாகிறது. தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப சட்டம் 1987 மற்றும் 1991 விதிகளில் நேரடி வணிகம், தனியார் வேளாண்விளைபொருள் அங்காடி / மண்டி உருவாக்கம் மற்றும் ஒப்பந்தப் பண்ணையம் ஆகியவற்றிற்கு எதிராக பிரிவுகள் ஏதுமில்லை.

எனினும், மேற்குறிப்பிட்ட இனங்கள் தொடர்பாக நடைமுறையில் உள்ள வேளாண் விளைபொருள் சட்டத்தில் நிலவும் ஒரு சில தெளிவற்ற பகுதிகளுக்கு பதிலாக, மாதிரி சட்டத்தில் பரிந்துரைத்துள்ளவாறு சில பிரிவுகளுக்கு திருத்தம் கொண்டுவருவது தொடர்பாக பரிந்துரைகள் அரசுக்கு தெரிவிக்கப்பட்டு தற்போது அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

தமிழ்நாட்டில் கரும்பு, மக்காச்சோளம், பருத்தி, மரவள்ளி, ஜெர்கின்ஸ் ஆகிய விளைபொருட்களுக்கு ஒப்பந்தப் பண்ணையம் நெடுங்காலமாக நடைமுறையில் இருக்கின்ற போதிலும், அவற்றில் எழும் தகராறுகளை சரி செய்வதற்கான அமைப்பு ஏதும் இல்லை. எனவே, மாதிரி சட்டத்தில் பரிந்துரைத்தவாறு ஒப்பந்த பண்ணையத்திற்கு சட்ட அங்கீகாரம் அளிக்கும் வகையிலும், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை ஒப்பந்த பண்ணையத்தில் எழும் தகராறுகளை சரி செய்யும் அமைப்பாகவும், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரை மேல் முறையீட்டு அதிகாரியாக நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### உழவர் சந்தைகள்

தமிழ்நாட்டில் நகராட்சி பகுதிகளிலும், பேரூராட்சிகளிலும் விவசாயிகள், காய்கறிகள், பழங்கள் ஆகிய விளைபொருட்களை இடைத் தரகர்கள் குறுக்கீடு ஏதுமின்றி நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய ஏதுவாக 103 உழவர் சந்தைகள் 1999ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு தங்கள் பொருளுக்கேற்ற நியாயமான விலை மற்றும் நுகர்வோருக்கு வெளிச்சந்தையை காட்டிலும் குறைவான விலையில் காய்கறிகள், பழங்கள் கிடைக்க செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

2007 – 08 ஆம் ஆண்டு மேலும் புதிதாக 49 உழவர் சந்தைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உழவர் சந்தைகளில் காய்கறி வரத்து மற்றும் விவசாயிகள் வருகையை அதிகரிக்கவும், உழவர் சந்தையினை மேம்படுத்தவும் இத்துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது, சராசரியாக நாள் ஒன்றுக்கு 1053 மெ.டன் காய்கறி மற்றும் பழங்கள் ரூ.108 இலட்சம் மதிப்பில் 7800 விவசாயிகள் மூலம் கொண்டுவந்து விற்பனை செய்யப்படுகின்றன. இதன்மூலம் தினந்தோறும் சுமார் 1,97,000 நுகர்வோர் பயன்பெற்று வருகின்றனர்.

**விற்பனை முனையங்கள் ஏற்படுத்துதல்**

மத்திய அரசின் நெறிமுறைபடி அழுகும் பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை பதப்படுத்தி விற்பனை செய்கிற அனைத்து வசதிகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் (Terminal Markets) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மூன்று பெரு நகரங்களின் அருகில் உத்தேசமாக ரூ.200 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளது. இதற்கு உலகளவில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

**வேளாண் இயந்திரமயமாக்கல்**

தமிழகத்தில் விவசாய கூலி தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளதால் வேளாண்மையை இயந்திரமயமாக்க தமிழக அரசு முடிவு செய்து, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், டிராக்டர் நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், அறுவடை இயந்திரம் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. தற்போது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 35 குதிரைத் திறன் கொண்ட இயந்திரங்களுக்கு 25 சத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.30 ஆயிரம் வரையில்தான் மானியம் வழங்கப்படுகிறது. களிமண் இறுகியுள்ள அடிமண் போன்ற வயல்களில் உழுவதற்கு 50 முதல் 55 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர் தேவைப்படுவதால் தற்போதுள்ள 35 குதிரைத் திறன் உள்ள இயந்திரங்களுக்கு மானியம் வழங்கப்படுவதைப்போல 55 குதிரைத் திறன் உள்ள இயந்திரங்களுக்கும் 25 சத மானியம் உச்ச வரம்பின்றி வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளே வேளாண் இயந்திரங்களை வாங்க முன் வந்தால் அவர்களுக்கு பிரபலமடைந்த வேளாண் இயந்திரங்களுக்கு 25 சத மானியமும், பிரபலம் அடையாத புதிய இயந்திரங்களுக்கு 50 சத மானியமும் மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**டி.ஏ.பி. உரத்தேவை**

தமிழகத்தில் யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள் எவ்வித தட்டுப்பாடுமின்றி தேவையின் அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் டி.ஏ.பி. உரத்தை பொருத்தமட்டில் தயாரிக்க தேவைப்படும் மூலப்பொருளான பாஸ்பாரிக் அமிலம் வெளிச்சந்தையின் விலை ஏற்றத்தால் உள்நாட்டில் உற்பத்தி குறைந்து தொடர்ந்து தமிழகத்தில் மட்டுமின்றி அனைத்து மாநிலங்களிலும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு டான்பெட் நிறுவனத்திற்கு ரூ.30 கோடி நிதி வழங்கி இறக்குமதியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது இறக்குமதியாளர்களும் டி.ஏ.பி. உர இறக்குமதியை வெகுவாக குறைத்துள்ளதால் டான்பெட் நிறுவனமும் கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நடப்பு காரீப் பருவத்தில் தமிழக விவசாயிகள் சுமார் 2.5 லட்சம் எக்டரில் நெற்பயிர் சாகுபடி செய்ய உள்ளதால் ஜுன் மாதம் வரை தேவையான டி.ஏ.பி. உரத்தை இருப்பு வைக்க

வேண்டிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய இரசாயனம், உரம் மற்றும் எஃகு துறை அமைச்சர் அவர்களுக்கு 4.4.2008 அன்று எழுதிய கடிதத்தில் தமிழகத்திற்கு தேவையான 73,500 மெட்ரிக் டன் டி.ஏ.பி. உரம் வழங்க கேட்டுள்ளார்கள்.

எனவே, மத்திய அரசு தமிழகத்திற்கு தேவையான டி.ஏ.பி. உரத்தினை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு விவசாயிகளின் நலனில் அக்கரைக் கொண்டு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி உதவியும், ஆக்கமும், ஊக்கமும் வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி. வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**